# தமிழ்நாட்டுக்குச் செய்த சாதனைகளை மோடியால் பட்டியலிட்டுக் காட்ட முடியுமா?

## ‘DT Next’ - ஆங்கில இதழுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புப் பேட்டி... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

**தொடர்கிறது. தோழமைக் கட்சிகளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தொகுதிப் பங்கீடும் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பதும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது ஓர் ஆரோக்கியமான கூட்டணியின் தொடர் செயல்பாடு. புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் முழுமையான வெற்றி என்பதுதான் எங்கள் இலக்கு.**

**கேள்வி:** வடக்கில் காங்கிரஸ் பெற்ற தோல்விகளைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சிக்கான தொகுதிகளை இம்முறை குறைப்பீர்கள் எனக் கூறப்பட்ட நிலையில், அதே பத்து தொகுதிகளை ஒதுக்கியிருக்கிறீர்களே? ஏன்?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : **யூகங்களாகப் பல செய்திகள் வெளியாகியிருக்கலாம். ஒரு சில தேர்தல் தோல்விகள் அடிப்படையில் எல்லா அம்சங்களையும் புறக்கணித்துவிட முடியாது. பா.ஜ.க.வுக்கு எதிராக நிற்கக்கூடிய தேசிய அளவிலான கட்சி காங்கிரஸ். அதற்குரிய இடத்தை வழங்கியிருக்கிறோம்.**

### களநிலவரத்தை தி.மு.க. உணர்ந்தே தொகுதிப் பங்கீடு!

**கேள்வி:** தொகுதிப் பங்கீட்டில் தி.மு.க. மிகவும் தாராளமாக நடந்துகொண்டதாகக் கூறப்படுகிறதே? மேலும் கடினமான தொகுதிகள் தானே நேரடியாகக் களமிறங்குவதாகவும் தெரிகிறது. இது என்ன உத்தி?

முதல்வர் மு.க.ஸ்டாலின்: **தி.மு.க.வைத் தோழமைக் கட்சியினர் நம்புகிறார்கள். தோழமைக் கட்சிகளை தி.மு.க. மதிக்கிறது. கள நிலவரத்தையும் தி.மு.க. உணர்ந்திருக்கிறது. இதன் வெளிப்பாடுதான் தற்போதைய தொகுதிப் பங்கீடு.**

**கேள்வி:** அதேநேரம், விடுதலைச் சிறுத்தைகளுக்குப் பொதுத் தொகுதி ஒதுக்காததால் விமர்சனமும் எழுந்துள்ளதே? அதில் என்ன சிக்கல்?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : **சட்டமன்றத் தேர்தலில் இரண்டு பொதுத் தொகுதிகளில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் போட்டியிட்டு வெற்றி பெற்று, உறுப்பினர்களாக உள்ளனர். தற்போதைய தேர்தல் களத்தையும் சூழலையும் பற்றி முழுமையாகக் கலந்தாலோசித்துத்தான் முடிவுகள் எடுக்கப்பட்டன. அது குறித்து, சகோதரர் திருமாவளவன் அவர்களே தெளிவாக விளக்கிவிட்டார்.**

### இளையவர்கள் - மூத்தவர்கள் - பெண்கள் என அனைவரையும் உள்ளடக்கிய வேட்பாளர் பட்டியல் வரும்!

**கேள்வி:** தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி சேலம் மாநாட்டில், வரும் தேர்தலில் இளைஞரணியினருக்கு அதிக வாய்ப்பளிக்க வேண்டும் என வெளிப்படையாகக் கோரிக்கை வைத்துள்ளாரே? அது நடக்குமா?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : **மூத்தவர்கள் - இளையவர்கள் - பெண்கள் ஆகிய அனைவரையும் உள்ளடக்கியே வேட்பாளர் பட்டியல் இருக்கும்.**

**கேள்வி:** தேர்தல் ஆணையர் அருண் கோயலின் திடீர் பதவி விலகல் பல சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது. தேர்தல் ஆணையத்தில் அரசியல் அழுத்தமும் கருத்து வேறுபாடுகளும் நிலவுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் ஆணையத்தின் சுதந்திரத்தன்மை கேள்விக்குள்ளாகியுள்ளது பற்றி?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : **தன்னிச்சையாகச் செயல்படக்கூடிய எந்தவொரு அமைப்பையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தன் கைப்பாவையாக மாற்றுவதை வழக்கமாகக் கொண்டிருப்பதைக் கடந்த 10 ஆண்டுகளில் பார்த்துவிட்டோம். தேர்தல் ஆணையத்தின் மீதான பா.ஜ.க அரசின் ஆதிக்கமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஜனநாயகத்தைக் காக்கின்ற போராட்டத்தில் இதனையும் கவனத்தில் கொண்டே செயல்படுகிறோம்.**

### பா.ஜ.க. அரசு உச்சநீதிமன்றத்தையே ஏமாற்ற நினைத்தது அம்பலமாகிவிட்டது!

**கேள்வி:** தேர்தல் பத்திர வழக்கில் உச்சநீதிமன்றத் தீர்ப்பு நம்பிக்கையளிக்கிறது. ஆனால் இதில் தேர்தல் ஆணையம் மற்றும் எஸ்.பி.ஐ தெரிவித்த பதில் அந்த அமைப்புகளின் சுதந்திரத்தன்மை மற்றும் நேர்மையை சந்தேகத்துக்குள்ளாக்கியுள்ளதே?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : **இந்திய மக்களின் கடைசி நம்பிக்கையாக உச்சநீதிமன்றம் உள்ளது. அதன் உத்தரவுகளையே புறக்கணிக்க நினைப்பதும், காலம் தாழ்த்த நினைப்பதும் அரசமைப்புக்கு எதிரான செயல். ஸ்விஸ் வங்கியில் பதுக்கப்பட்டுள்ள இந்தியாவின் கறுப்புப்பணத்தை மீட்டு, ஒவ்வொரு இந்தியரின் வங்கிக் கணக்கிலும் 15 லட்ச ரூபாய் போடுவேன் என்று சொன்ன மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு, அதில் ஒரு நயா பைசா வைக்கூட மீட்காமல், ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி, பல்லாயிரம் கோடிகளைப் பல நிறுவனங்க ளிடமிருந்து நிதியாகப் பெற்று, நீதிமன்றத்தையே ஏமாற்ற நினைத்தது அம்பலமாகியுள்ளது.**

**தன்னிச்சையாகச் செயல்படக்கூடிய எந்தவொரு அமைப்பையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தன் கைப்பாவையாக மாற்றுவதை வழக்கமாகக் கொண்டிருப்பதைக் கடந்த 10 ஆண்டுகளில் பார்த்துவிட்டோம். தேர்தல் ஆணையத்தின் மீதான பா.ஜ.க அரசின் ஆதிக்கமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஜனநாயகத்தைக் காக்கின்ற போராட்டத்தில் இதனையும் கவனத்தில் கொண்டே செயல்படுகிறோம்.**

**கேள்வி:** தி.மு.க.வும் தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி பெற்றுள்ளது எனக் கூறி பா.ஜ.க. விமர்சனத்தில் இருந்து நழுவுகிறதே?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : **தி.மு.க என்பது தனது முதல் தேர்தல் களத்திலிருந்தே தேர்தல் நிதி திரட்டுகிற இயக்கம் தான். 1967 தேர்தலில் 10 லட்சம் என்கிற தேர்தல் நிதி இலக்கு நிர்ணயித்தார் பேரறிஞர் அண்ணா. 11 லட்சமாகத் நிதி திரட்டித் தந்தார் கலைஞர். நாங்கள் நிதி திரட்டுவது என்பதும் அது குறித்த கணக்குகளை முறையாகத் தணிக்கை செய்வதும் வழக்கம்தான். இப்போதும் அதே வெளிப்படைத் தன்மையுடன்தான் தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டியிருக்கிறோம். ஆனால், தி.மு.க உள்ளிட்ட கட்சிகளின் செயல்பாடுகளைக் குறையாக குற்றமாகச் சொல்லிக் கொண்டிருந்த பா.ஜ.க.வின் யோக்கியத் தன்மை என்ன என்பதும், அது யார் - யாரிடம் எதற்காக - எத்தகைய நெருக்கடி கொடுத்து தேர்தல் நிதியைப் பெற்றுள்ளது என்பதும் கவனத்திற்குரியது. கையும் களவுமாக சிக்கியுள்ளது பா.ஜ.க.**

### பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அரசியலமைப்பு சட்டத்தையே தூக்கி எறிந்து விடுவார்கள்!

**கேள்வி:** கர்நாடக பா.ஜ.க. எம்.பி ஒருவர் அரசியலமைப்பை மாற்ற வேண்டும் என வெளிப்படையாகப் பேசியிருக்கிறாரே? அக்கட்சியினர் இப்படி பேசுவது இது முதல் முறையும் அல்ல. இது அரசியலமைப்புக்கு ஆபத்து என நினைக்கிறீர்களா?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : **மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் அரசியலமைப்பு சட்டத்தையே தூக்கி எறிந்து விடுவார்கள். இதைத்தான் வெளிப்படையாக அவர் சொல்லி இருக்கிறார். பா.ஜ.க தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதற்கு இதைவிட வேறு காரணம் தேவையில்லை.**

### பா.ஜ.க.வின் பொய்முகம் தேர்தல் களத்தில் எதிரொலிக்கும்!

**கேள்வி:** எதிர்வரும் தேர்தல் கொள்கைசார்ந்த மோதலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வாக்காளர்களிடம் கவனம் பெறும் விஷயங்களாக எவை இருக்கும்?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : **பா.ஜ.க.வின் பொய் வாக்குறுதிகள், துரோகங்கள், மக்களைப் பிளவுபடுத்தும் சதிகள், மாநில உரிமைகளுக்கான ஆபத்து இவற்றுக்குள் நீங்கள் சொன்ன அனைத்தும் அடங்கும். அவையே தேர்தல் களத்தில் நாடெங்கும் எதிரொலிக்கும்.**

**கேள்வி:** 5 ஆண்டுகள் கழித்து சி.ஏ.ஏ நடைமுறைப்படுத்துவதற்கான விதிமுறைகளை பா.ஜ.க அரசு அறிவித்துள்ளது. இது திசைதிருப்பும் உத்தி என்கிறார்கள் சிலர். வாக்காளர்களை மதரீதியாகப் பிரிவினை செய்யும் செயல் என்கிறார்கள் சிலர்? சி.ஏ.ஏ. பா.ஜ.க.வின் இரகசிய ஆயுதமா?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : **மதரீதியாக - மொழிரீதியாக - சாதிரீதியாக மக்களைப் பிளவுபடுத்தும் அரசியலைத்தான் பா.ஜ.க. தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதன் ஓர் அங்கம்தான் சி.ஏ.ஏ. தற்போது சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கையாக மட்டுமே இது தெரிந்தாலும், எதிர்காலத்தில் ஒவ்வொரு மாநிலத்தில் வாழும் வெவ்வேறு மொழி பேசும் மக்களை நோக்கியும் புதிய சட்டங்களை பா.ஜ.க. கொண்டு வரும். அதற்கு சி.ஏ.ஏ. ஒரு முன்னோட்டம்.**

### சி.ஏ.ஏ.வை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த மாட்டோம் என்பது உறுதி!

**கேள்வி:** கேரளம், மேற்கு வங்க முதலமைச்சர்களைத் தொடர்ந்து நீங்களும் சி.ஏ.ஏ. தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படாது எனக் கூறியிருக்கிறீர்கள்? அது சாத்தியமா?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : **ஒன்றிய அரசு கொண்டு வரும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மாநில அரசுகளிடம்தான் உள்ளது. இந்தி மொழி தொடர்பான ஒன்றிய அரசின் சட்டத்திற்கு எதிராகத்தான் பேரறிஞர் அண்ணா இருமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தினார். இடஒதுக்கீட்டில் பொருளாதார அளவுகோல் என்கிற ஒன்றிய அரசின் நடைமுறையை மாநில அரசு ஏற்கவில்லை. அது போலத்தான் சி.ஏ.ஏ.விலும் எங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம். இதற்குரிய அரசியல்சட்ட உரிமைக்கான வழியையும் நீதிமன்றத்தின் மூலம் நிலை நாட்டுவோம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் DT Next ஆங்கில இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

---

சீர்மரபினருக்கு ஒற்றைச் சான்றிதழ் வழங்க உத்தரவிட்ட

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - வல்லரசு பார்வர்டு பிளாக் நன்றி!

### நிறுவனர் - தலைவர் பி.என்.அம்மாவாசி அறிக்கை!

*சென்னை, மார்ச் 18-*

*தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வல்லரசு பார்வார்டு ப்ளாக் நிறுவனர் தலைவர் பி.என்.அம்மாவாசி நன்றி தெரிவித்துள்ளார்.*

*அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் நிறுவனர் தலைவர் பி.என்.அம்மாவாசி தனது நன்றி கடிதத்தில் கூறியிருப்பதாவது:-*

*வல்லரசு பார்வர்டு பிளாக் கோரிக்கையை ஏற்று, 68 சீர்மரபினர் சாதிகளைச் சேர்ந்த மக்களின் நீண்டகால கோரிக்கையான டி.என்.டி அதாவது சீர்மரபின பழங்குடியினர் என்ற ஒற்றைச்சான்றிதழ் வழங்கப்படும்.*

*இது சம்பந்தமாக அரசாணை பிறப்பிக்கப்படும் என முதல்வர் அவர்கள் இன்று அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறார். அதற்காக நான் டி.என்.டி வகுப்பைச்சேர்ந்த பிரமலை கள்ளர் என்ற முறையில் எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முத்தமிழ் அறிஞர் கலைஞரைப் போன்று பிற்படுத்தப்பட்ட மக்கள் சீர்மரபினருக்கு பாடுபடும் ஒரே முதல்வர் நமது தளபதியார் அவர்கள்.*

*இந்த குழப்பம் எம்.ஜிஆர் முதலமைச்சராக இருந்த போது அரசாணை 1310/1979 ஜுலை 30-ஆம் தேதி வெளியிடப்பட்டது. அதில் டி.என்.டி. சீர்மரபு பழங்குடியினர் என்பது மாற்றப்பட்டு டி.என்.சி அதாவது சீர்மரபு வகுப்பினர் என மாற்றப்பட்டது.*

*எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக இருந்த போது இந்த குழப்பம் அதிகரித்து மத்திய, மாநில அரசுகளில் வேலைவாய்ப்பு மற்றும் சலுகைகளை பெறுவதில் குழப்பம் நீடித்தது.*

*ஆனால் தமிழ்நாடு முதல்வர் இதற்கு நல்ல முடிவாக டி.என்.டி. என்ற சீர்மரபு பழங்குடியினர் என்ற ஒற்றை சான்றிதழ் வழங்க அரசாணை அறிவிக்கப்படும் என 16.03.2024 அன்று வரலாற்றுச் சிறப்புமிக்க அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார். அவருக்கு வல்லரசு பார்வார்டு ப்ளாக் கட்சியின் நிறுவனர் தலைவர் ஆகிய நான் மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

---

தி.மு.க. கூட்டணிக்கு

## அம்பேத்கர் முன்னணிக் கழகம் ஆதரவு!

### நிறுவனத் தலைவர் திண்டிவனம் ஸ்ரீராமுலு அறிக்கை!

*சென்னை, மார்ச் 18-*

*தி.மு.கழகக் கூட்டணிக்கு ஆதரவளித்து அம்பேத்கர் முன்னணிக் கழகம் மற்றும் சென்னை துறைமுக எஸ்.சி. எஸ்.டி. தொழிலாளர்கள் கழக நிறுவனத் தலைவர் திண்டிவனம் ஸ்ரீராமுலு, பொதுச் செயலாளர் இ. பிரபாகரன் ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.*

*இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு: -*

*அம்பேத்கர் முன்னணி கழகம் தொடர்ந்து தி.மு.க. விற்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறோம். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி கட்சிகளின் அமோக வெற்றிக்கு பாடுபட உள்ளோம்.*

*இவ்வாறு அம்பேத்கர் முன்னணி கழக நிறுவனர் தலைவர் திண்டிவனம் ஸ்ரீராமுலு மற்றும் அம்பேத்கர் முன்னணி கழக பொதுச்செயலாளர் ஜி.பிபாகரன் ஆகியோர் கூட்டாக ஆதரவை செய்தியின் மூலம் தெரிவித்துக்கொண்டுள்ளனர்.*

*இவ்வாறு அம்பேத்கர் முன்னணிக் கழக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.*

---

திருவள்ளூர் ஒன்றியத்தில் - ரூ.27 லட்சம் மதிப்பில்

## 38 கிராம ஊராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்!

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. வழங்கினார்!

*திருவள்ளூர், மார்ச் 18*

*தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாளான மார்ச் 1ஆம் தேதி திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் பாடியநல்லூர் விளையாட்டு திடலில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தின் கீழ் 526 ஊராட்சிகளில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.*

*இதனைத் தொடர்ந்து பூந்தமல்லி தொகுதி திருவள்ளூர் ஒன்றியத்தில் உள்ள 38 கிராம ஊராட்சிக்கு ரூ.27 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா நேற்று முன்தினம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.*

*விழாவிற்கு ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன் தலைமை தாங்கினார். ஒன்றிய குழு துணைத் தலைவர் எம்.பர்கத்துல்லாகான், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கே.ரவி, குணசேகரன், ஒன்றிய செயலாளர்கள் ஆர். ஜெயசீலன், புஜ்ஜி ராமகிருஷ்ணன், ஒன்றிய கவுன்சிலர்கள் த.எத்திராஜ், வேலு, பூவண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*இந்த விழாவில் பூந்தமல்லி தொகுதி எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கிரிக்கெட் விளையாடுவதற்கு தேவையான கிரிக்கெட் மட்டை, பந்து, கை உறை, ஸ்டெம்ப், போன்ற உபகரணங்களும், கால் பந்து, கைப்பந்து, கேரம் போர்டு, சிலம்பம், கம்பு, பிளாஸ்டிக் விசில், ஸ்கிப்பிங் கயிறு, உடற்பயிற்சி செய்வதற்கான தூக்கு குண்டு உள்பட ரூ.27 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பிலான 33 வகையான விளையாட்டு உபகரணங்களை ஊராட்சி மன்ற தலைவர்களிடம் வழங்கினார்.*



திராவிட மாடல் ஆட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2020 – 2021 மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 1கோடியே 19 லட்சம்* மதிப்பீட்டில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4 வார்டு 60 வி.ஜி.என் அவின்யூ பூங்கா அடுக்கு மாடி குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள நவீன பூங்கா அமைக்கப்பட்டு உள்ளது. இதில் நவீன வசதிகள் கொண்ட 2 டென்னிஸ் கோர்ட், நடைபயிற்சி பாதைகள் மற்றும் அமர்ந்து இளைப்பாறிட இருக்கைகள், சிறுவர்களுக்கான விளையாட்டு சாதனங்கள் மற்றும் இயற்கை எழிலுடன் சுற்றி மரங்களும், பூ செடிகளும். கழிப்பறைகள், காவலாளி அறை, பூங்காவை சுற்றி சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டு உள்ளது. இப்பூங்காவை தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இதில் 4 வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ், ஐந்தாவது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி எம்.சி, செ.சுரேஷ் எம்.சி, முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள் இரா.செல்வகுமார், இரா. ரத்தினகுமார் மற்றும் ஆர்.சஞ்சீவி, எஸ்.ஜி.கருணாகரன், இரா.விஜயகுமார், எஸ்‘.மகேஷ், டி ஆர்.முரளி, சிப்ஸ்மணி. ஆர் .செல்வகுமார், எஸ்.ராஜேஷ், எஸ் .கார்த்திக், எஸ் .விக்கி ஏ.யுவராஜ், குட்டி தினேஷ், கே. ராஜா, எஸ்.செல்வபிரகாஷ், சே.ரமேஷ், எம் தாஸ், மதன், நவீன்குமார் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், நலசங்க நிர்வாகிகள், பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



இராயபுரம் தொகுதி, 53 வது வார்டு, காத்பாட கால்பந்தாட்டக் குழு மற்றும் ஏ.மோசஸ் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு கோப்பைப் போட்டி இணைந்து நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியை சிறப்பு அழைப்பாளராக இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி பங்கேற்று போட்டியை தொடங்கி வைத்து. ல்பந்தாட்ட வீரர்களுக்கு நிதி உதவி அளித்து ஊக்கப்படுத்தினார். இந்நிகழ்வில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ. பெ.சுரேஷ், பகுதிக் கழக முன்னாள் துணைச் செயலாளர் ஜி.எஸ்.முருகன், காத்பாடக் கால்பந்தாட்டக் குழுவினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் இருந்தனர்.